**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

<table>
<tr><td colspan="4">2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9–ம் நாள் வியாழக்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிச்செல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.</td></tr>
<tr><td>பெயர்:</td><td>முத்து</td><td>தொழில்:</td><td></td></tr>
<tr><td>த.பெ:</td><td>சாலைத்தேவர்</td><td>சமயம்:</td><td></td></tr>
<tr><td>கிராமம்:</td><td></td><td>சாதி:</td><td></td></tr>
<tr><td>வட்டம்:</td><td></td><td>வயது:</td><td></td></tr>
</table>

**09.04.2026 OS.18/2023 வா.சா.2. முத்து**

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**:

1) வாதி என்ன பரிகாரம் கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பாக்கியலெட்சுமியிடமிருந்து பூமிநாதன் கிரையம் வாங்கிய சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தை தடைசெய்யக்கூடாது என வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்திற்கு ஆதியில் நாகமலைத் தேவர் மனைவி கருப்பாயி பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். 1985க்கு பிறகு எனது தாயார் சா.கருப்பாயி பெயரில் பட்டா மாறியது என்றால் நாகமலைத் தேவருக்கு 4 வாரிசுகள் அதில் எனது தகப்பனார் சாலைத்தேவர் மூத்த மகன் ஆவார் முறைப்படி எனது தாயார் சா.கருப்பாயி பெயரில் பட்டா மாறியது. எனது தாயார் பெயரில் எவ்வாறு பட்டா மாறியது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) எனது தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்கள் எந்த ஆண்டு பாகம் செய்து கொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது எனது தகப்பனார் அனுபவம் செய்தததை நாங்கள் எடுத்துக்கொண்டோம். நாகமலைத் தேவர் வாரிசுகளில் தாவா சொத்து புல எண். 29/7 யார் பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் யார் பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு புல எண். 29/3 30 சென்ட் விஸ்தீரனம் பாகத்தில் ஒதுக்கப்பட்டதாகவும் அதை எனது தகப்பனார் 1953 ஆம் ஆண்டிலேயே விற்பனை செய்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) தாவா சொத்தை இந்த நம்பர் 2ம் பிரதிவாதியின் தகப்பனார் பெரியகருப்பத்தேவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சுப்பிரமணியனுக்கு புல எண். 29/9 ல் 30 சென்ட் விஸ்தீரனம் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு யார் விவரம் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். வழக்கு சொத்து 2ம் பிரதிவாதியின் தகப்பனார்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.09 18:01:27 +0530

பெரியகருப்பத் தேவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் மேற்படி சொத்தில் எனக்கோ எனது தாயாருக்கோ எவ்வித பாத்தியமோ உரிமையோ கிடையாது என்றால் சரியல்ல.

4) எனது தாயார் பெயரில் UDR காலத்தில் தவறுதலாக தாவா சொத்திற்கு பட்டா ஏற்பட்டது என்றாலும் அதன் பேரில் தாவா சொத்தை நானும் எனது சகோதரியும் சேர்ந்து பாக்கியலெட்சுமிக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி வருவாய் கோட்டாட்சியரிடம் மேற்படி UDR காலத்தில் தவறுதலாக ஏற்பட்ட பட்டாவை ரத்து செய்ய மனு செய்ததில் UDR காலத்து தவறுதலை ரத்து செய்ய மாவட்ட வருவாய் அலுவலருக்குத் தான் அதிகாரம் உள்ளது என சொல்லி மேற்படி மனு முடிக்கப்பட்டது என்றால் மேல் முறையீட்டுக்கு போகச்சொல்லி முடித்துவைத்தார்கள்.

5) அதன் பேரில் இந்த நம்பர் 2ம் பிரதிவாதி மாவட்ட வருவாய் அலுவலரிடத்தில் மேல் முறையீடு செய்து மேற்படி மேல் முறையீடு நாளது தேதி வரை நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் எனது சகோதரியும் தாவா சொத்தைப் பொறுத்து பாக்கியலெட்சுமிக்கு கிரையம் செய்து கொடுத்த பின்னர் மேற்படி பாக்கியலெட்சுமி அவரது சகோதரரான வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

6) பாக்கியலெட்சுமி உண்மையில் அவரது சகோதரரான இந்த நம்பர் வாதிக்கு எவ்வித கிரைய ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் இந்த 2ம் பிரதிவாதி ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மலரணையாக ஒரு கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை 2ம் பிரதிவாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல நான் கிரையம் கொடுத்த நாள் முதல் பாக்கியலெட்சுமியிடமும் அவரது சகோதரரான இந்த நம்பர் வாதியிடமும் தான் தாவா சொத்தின் அனுபவம் இருந்து வருகிறது.

7) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதியின் தகப்பனாரான பெரியகருப்பத்தேவருக்கு ஒதுக்கபட்டதாக சொல்லியுள்ள புல எண். 28/11 ல் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 28 சென்ட் ஆகும். மேற்படி புல எண்ணில் 28 சென்ட் உள்ளது என்பதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது தற்போது 2ம் பிரதிவாதி வசம் விற்றது போக மீதி இடம் தான் உள்ளது. புல எண். 28/11 ல் மொத்த விஸ்தீரனம் 18 சென்ட் நாகமலைத்தேவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதில் எனது தகப்பனார் சாலைத்தேவருக்கு 6 சென்டும் அவரது உடன் பிறந்த சகோதரர்களான 2ம் பிரதிவாதியின் தகப்பனார்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.09 18:01:34 +0530

பெரியகருப்பத்தேவருக்கு 6 சென்டும், சுப்பிரமணியனுக்கு 6 சென்டும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றாலும் மேற்படி புல எண்ணில் 28 சென்ட் விஸ்தீரனம் உள்ளதாக நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

8) மேற்படி சாலைத்தேவரும், சுப்பிரமணியனும் அவர்களுக்கு பாகமாக கிடைத்த தலா 6 சென்ட் விஸ்தீரனத்தை கடந்த 1963 ம் வருடம் சலுகைத்தேவர் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தைப் பொறுத்து யார் யாருக்கு இடையில் கிரைய உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் மேற்படி ஆவணத்தில் 1ம் பிரதிவாதி மல்லிகாவின் கணவர் (அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை), முத்து, ராக்கு, இருளாயி, ஆறுமுகம் ஆகியோர் இடத்தில் கையொப்பம் வாங்கிச் சென்றார் பூமிநாதன் மற்றும் பாக்கியலெட்சுமி மேற்படி ஆவணத்தில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. தற்போது வழக்கு சொத்தின் கிரையப் பத்திரம் யார் வசம் உள்ளது என்றால் மல்லிகாவின் கணவர் வசம் உள்ளது.

9) நான் தாவா சொத்தை ஆக்கிரமனமாக அத்துமீறி உள்ளே நுழைந்து அபகரிக்க முயற்சித்ததாக 2ம் பிரதிவாதி சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பொய் வழக்காகும். எனது நிரூபண வாக்குமூலத்தில் ADSP சீமைச்சாமி என்பவர் 2ம் பிரதிக்கு உறவினர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர் எனக்கும் உறவினர் தான் என்றால் சரிதான். தாவா சொத்து நாகமலைத் தேவரின் மகனான பெரியகருப்பத் தேவருக்கு பாகத்தில் கிடைக்கப்பெற்று அவர் அனுபவம் செய்து வந்து அவர் காலத்திற்கு பின் அவரது வாரிசுகளான இந்த நம்பர் 2ம் பிரதிவாதியும் அவரது சகோதரரும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் நான் எனது தகப்பானாருக்கு பாகத்தில் கிடைத்த சொத்துக்களை விற்பனை செய்துவிட்டு 2ம் பிரதிவாதிக்கு பாத்தியமுடைய சொத்துக்களில் UDR காலத்தில் ஏற்பட்ட தவறை பயன்படுத்தி உரிமை கொண்டாடி விற்பனை செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.09 18:01:41 +0530

District Munsif Cum Judicial Magistrate,

Thiruppuvanam